சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 29.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 102/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | ரமேஷ் |
| தந்தை பெயர் | : | மருதமுத்து |
| கிராமம் | : | பெரிய சிங்களாந்தி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | கம்பி பிட்டர் |
| வயது | : | 42 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 1, 2, 4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 கார்த்திகேயன் என்பவரை எனக்கு தெரியும், 6 ம் எதிரி சுப்பிரமணியன் என்பவரை தெரியும், 30.06.2011 ம் தேதி அன்று நான் வேலைக்கு சென்றுவிட்டு மாலை 6

மணியளவில் பள்ளாங்கோவில் கடைத்தெரு அருகே கூட்டமாக இருந்தது எனக்கு தெரிந்த நபர்கள் சண்டை என சொன்னார்கள். நானும் குமார் என்பவரும் வேடிக்கை பார்த்தோம். அங்கு வந்த போலீசார்கள் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். பின்னர் காவல் நிலையம் வழியாக நான் சென்று கொண்டு இருந்தேன். காவல் நிலையத்தில் கூட்டாக இருந்தது அங்கு 2 கார்கள் இருந்தது. கார்கள் உடைந்து இருந்தது. அதைப் பார்த்து விட்டு நான் வீட்டுக்கு சென்று விட்டேன். கைப்பற்றுதல் மகஜரில் காட்டப்படும் முதலாவது கையொப்பம் என்னுடையது. நானும் கர்ணனும் கையொப்பம் செய்து கொடுத்தோம். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 30.06.2011 ம் தேதி திருத்துறைப்பூண்டி போலீசார் வந்து இரவு 9.00 மணிக்கு TN 50 B 1081 என்ற பதிவு எண் கொண்ட காரையும் TN 02 Y 5937 ஸ்கார்பியோ வாகனத்தையும் கைப்பற்றிய ஆயுதங்கள் சுமார் 35 செ.மீ. நீளமுள்ள இரும்பு ராடு, இரத்தம் தோய்ந்துள்ள சுமார் 86 செ.மீ நீளமுள்ள அருவாள் ஒன்று, 27 செ.மீ நீளமுள்ள அருவாள் ஒன்று ஆகிய ஆயுதங்களை காரில் இருந்து கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு என்னையும் கர்ணன் என்பவரையும் சாட்சியாக இருந்து கையொப்பம் இட்டோம் என்றும், இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்றும் நாங்கள் விசாரணை அடிப்படையில் சாட்சியாக இருந்து கையொப்பம் இட்டோம் என்றும் போலீசார் விசாரித்த போது விவரம் சொன்னோம் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சண்டை நடந்தது பற்றி எனக்க நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் ஆமாம். காவல் நிலையத்தில் வைத்து எந்த காரில் இருந்து ஆயுதங்கள் எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.29 17:43:01 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.